# வந்தவாசி நகரமன்றக் கூட்டம்
## சாதாரணக் கூட்ட அறிவிப்பு

27.01.2021–ம் தேதி புதன் கிழமை காலை 11.00 மணிக்கு நடைபெற்ற வந்தவாசி நகரமன்ற சாதாரணக் கூட்ட நடவடிக்கைகள்.

முன்னிலை : ச.பார்த்தசாரதி,பி,ஏ.,
தனி அலுவலர் மற்றும் நகராட்சி ஆணையாளர், வந்தவாசி நகராட்சி.

பொருட்கள்

குறள் :

கற்க கசடற கற்பவை கற்றப்பின்
நிற்க அதற்கு தக.

012. வந்தவாசி நகராட்சியில் பணிபுரியும் வருவாய் உதவியாளர்களுக்கு கணிணியின் மூலம் கேட்பு அறிக்கையினை எடுப்பதற்கு *Net Cable* அமைப்பதற்கு தேவையான மின் உபகரணங்கள் பெற்று வருவாய் உதவியாளர்களுக்கு அமைத்து கொடுத்த வகையில் தொகை ரூ.1700/– மற்றும் ரூ.3196/– ஆக மொத்தம் ரூ.4,896/– ஐ திரு.திருநாவுக்கரசு, என்பவருக்கு வழங்கிட மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு–

1. மன்றம் ஒப்புதல் அளிக்கலாம்.
2. அவசரம் அவசியம் கருதி வருவாய் உதவியாளர்களுக்கு தேவையான மின்உபகரணங்கள் பொருத்தி, நெட் வசதி அமைத்து செயல்படுத்தி கொடுத்த வகையில் தொகை ரூ.4896/–ஐ வழங்கிட மன்றம் அனுமதி அளித்தல்.

(ந.க. எண்.105/2020/சி1

013. வந்தவாசி நகராட்சி அலுவலகத்திற்கு கணினி சேவை மையத்திற்கு ரசீதுகள் கணிணியில் பிரிண்ட் எடுப்பதற்கு தேவையான ரசீதுகள் (சொத்துவரி, தொழில்வரி, காலிமனைவரி, குடிநீர்கட்டணம், வரியில்லாஇனம்) 70,000/– (1+1) அச்சடித்துக்கொள்ள ஆகும், தோராய செலவினம் ரூ.2,85,000/– மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு–

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. அவசரம் அவசியம் கருதி கணிணியில் பிரிண்ட் எடுப்பதற்கு தேவையான ரசீதுகள் அச்சடித்துக்கொள்ள தோராய செலவினம் ரூ.2,85,000/– மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க. எண்.1107/2020/சி1)

014.வந்தவாசி நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.6ல் உள்ள கே.எஸ்.கே. நகர் முதல் குறக்குத் தெருவில் நீண்ட காலமாக மழைநீர் வடிகால் இல்லாத காரணத்தால் மழைநீரானது சாலையில் தேங்கி சாலைகளை பழுதடையச்செய்துள்ளது. மேலும் குடியிருப்பு வீடுகளில் இருந்து வெளியேறும் கழிவுநீர் வெளியேறி சாலையில் தேங்கி நிற்கின்றது. இதனால் போக்குவரத்து பெரிதும் பாதிக்கப்படுகிறது, சுகாதார சீர்கேடும் ஏற்படுகிறது. எனவே பொதுமக்களின் கோரிக்கைகளுக்குகிணங்க இச்சாலையின் மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலம் அமைக்க தயாரிக்கப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.3.40 இலட்சம் மன்ற அனுமதிக்கும், பார்வைக்கும் வைக்கப்படுகிறது".

அலுவலக குறிப்பு–

1. மன்றம் ஒப்புதல் அளிக்கலாம்.

(ந.க. எண்.0063/2021/இ1)

015. வந்தவாசி நகராட்சியில் வார்டு எண்.19ல் உள்ள புதிய பேருந்து நிலையம் எதிரில் அருள்மிகு அங்காளபரமேஸ்வரி அம்மன் கோயில் மயானசூறை திருவிழா நிகழ்ச்சியில் பல்லாயிரம் கணக்கான பக்தர்கள் வருகை தருவார்கள். மேற்கண்ட இடத்தில் மயானசூறை சுவாமி செல்வதற்கு ஏதுவாக கால்வாயின் மீது கான்கீரிட்ல்லான ஸ்லாப் அமைக்க பொதுமக்கள் கோரிக்கைகளுக்கிணங்க ஆகும் மதிப்பீடு தொகையானது ரூ.45,000/—பணி செய்ய மன்ற அனுமதிக்கும், பார்வைக்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு—

1. மன்றம் ஒப்புதல் அளிக்கலாம்.

(ந.க. எண்.0064/2021/இ1)

016.வந்தவாசி நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.6ல் உள்ள கே.எஸ்.கே.நகர் முதல் குறுக்குத்தெருவில் உள்ள சிமெண்ட் சாலையானது மிகவும் பழுதடைந்துள்ளது. மேலும் பொதுமக்கள் போக்குவரத்துக்கு சிரமமாக உள்ளது. மேலும் குடிநீர் குழாய் பதித்தல் பணி நடைபெற்றதால் ஆங்காங்கே பள்ளங்கள் ஏற்பட்டுள்ளது. எனவே இச்சாலையினை பொதுமக்கள் கோரிக்கைக்குகிணங்க புதுப்பித்து புதிய சிமெண்ட் சாலையாக மாற்ற தோராய செலவினமாக ரூ.2.50 இலட்சம் தேவைப்படுவதால் மன்ற ஒப்புதலுக்கும் , அனுமதிக்கும், பார்வைக்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு—

1. மன்றம் ஒப்புதல் அளிக்கலாம்.

(ந.க. எண்.0065/2021/இ1)

017.வந்தவாசி நகராட்சியில் 1 முதல் 24 வார்டுகள் உள்ளன இவ்வார்டுகளில் உள்ள தெருக்களில் உள்ள தெருவிளக்குகள் பராமரிப்பு செய்வதற்கு தேவையான உபகரணங்கள் மற்றும் உதிரி பாகங்கள் கொள்முதல் செய்ய அரசு அங்கீகாரம் பெற்ற Sisco.NA. DT. small Industries Society cooperative society வேலூர் நிறுவனத்தின் மூலம் விலைப்புள்ளி பெறப்பட்டு இப்பொருட்களை வழங்க ஆகும் தோராயசெலவினமான ரூ.3.00 இலட்சத்திற்கு மன்ற ஒப்புதலுக்கும், அனுமதிக்கும், பார்வைக்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு—

1. மன்றம் ஒப்புதல் அளிக்கலாம்.

(ந.க. எண்.0066/2021/இ1)

018. வந்தவாசி நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.19ல் புதிய பேருந்து நிலையம் உள்ளது. இதில் பயணிகள் காத்திருப்பு அறை உள்ளது. இதில் பயணிகள் காத்திருப்பிற்கு போதுமான மின்விளக்குகள், மினிவிசிறிகள் மற்றும் குடிநீர் இல்லாத காரணத்தினால் பொதுமக்கள் மிகவும் சிரமப்படுகின்றனர், மேலும் கொரானா தொற்று காரணமாக பேருந்து நிலையத்திற்கு வரும் பொதுமக்களை பரிசோதனை செய்ய ஏதுவாக இவ்விடத்தில் தடுப்பு அமைத்தும், ஏனைய வசதிகள் செய்யவும், பொதுமக்கள் கோரிக்கைகளுக்கிணங்க தோராய செலவினமாக ரூ.50,000/—(ஐம்பதாயிரம் மட்டும்) பணிகள் மேற்கொள்ள மன்ற ஒப்புதலுக்கும், அனுமதிக்கும், பார்வைக்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு—

1. மன்றம் ஒப்புதல் அளிக்கலாம்.

(ந.க. எண்.0067/2021/இ1)

019. வந்தவாசி நகராட்சியில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் மூலம் நுண்ணுயிர் உரமாக்கும் மைய கட்டிடம் மூன்று கட்டப்பட்டு பயன்பாட்டில் உள்ளது. மேலும் , மையத்தில் வரும் கழிவுகளை உலர வைக்க மையத்தின் முன்புறம் களம் அமைக்கப்பட்டுள்ளது. மேற்படி களமானது திறந்தவெளியில் உள்ளதால் அவற்றில் ஆடு, மாடுகள் வந்து பணியினை மேற்கொள்ள இடையூராக உள்ளது. எனவே அவைகளை தடுக்க மையத்தின் பக்கவாட்டில் தடுப்பு சுவர் அமைத்து கிரில்கேட் அமைக்க தோராய செலவினம் ரூ.1.00 (ஒரு இலட்சம்) மதிப்பீடு தொகையில் பணி செய்திட மன்ற ஒப்புதலுக்கும், அனுமதிக்கும், பார்வைக்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு—

1. மன்றம் ஒப்புதல் அளிக்கலாம்.

(ந.க. எண்.0068/2021/இ1)

020. வந்தவாசி நகராட்சிக்குட்பட்ட 1 முதல் 24 வார்டுகளில் உள்ள தெருக்களில் பழுதடைந்த மழைநீர்கால்வாய்களை மறுசீரமைக்க பொதுமக்கள் வேண்டுதலுக்கிணங்க மழைநீர் வடிகால்வாய்கள் அமைக்க தோராய செலவினமாக மதிப்பீடு தொகை ரூ. 1. 80 (ஒரு இலட்சத்து என்பதாயிரம் மட்டும்) மன்ற ஒப்புதலுக்கும், அனுமதிக்கும், பார்வைக்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு—

1. மன்றம் ஒப்புதல் அளிக்கலாம்.

(ந.க. எண்.0069/2021/இ1)

021. வந்தவாசி நகராட்சிக்குட்பட்ட வார்டுகளில் நடைபெறும் கட்டிடம் மற்றும் இடிப்பு பணிகளில் அகற்றப்படும் கட்டிட பொருட்களை சேமிக்க நகராட்சி எல்லைக்குட்பட்ட இடத்தில் இரும்பு கம்பிகளான வேலியுடன் கூடிய கான்கீரிட் தூண்கள் அமைத்து, நுழைவுவாயில் கேட் மற்றும் பெயர்பலகை அமைத்திட தோராயசெலவினமாக ரூ. 1. 50 இலட்சம் மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ள மன்ற ஒப்புதலுக்கும், அனுமதிக்கும், பார்வைக்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு—

1. மன்றம் ஒப்புதல் அளிக்கலாம்.

(ந.க. எண்.0070/2021/இ1)

022. வந்தவாசி நகராட்சிப்பகுதி வார்டு எண்.1 முதல் 24 வரை உள்ள சிறுமின்விசை பம்புகள் மற்றும் கைபம்புகள் பராமரிப்பு பணிகள் ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் 12.01.2021 தேதியன்று வரப்பெற்ற இரண்டு (2) ஒப்பந்தப்புள்ளிகள்மன்றத்தின் பார்வைக்கும், முடிவுக்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண். | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விவரம் |
|---|---|---|
| 1. | திரு.G.முரளி | மதிப்பீட்டைவிட 0.15 % குறைவு |
| 2. | திரு.V.சுந்தரம் | மதிப்பீட்டைவிட 0.40 % அதிகம் |

அலுவலக குறிப்பு—

1. மன்றம் முடிவு செய்யலாம்.
2. வரப்பெற்றுள்ள இரண்டு (2) ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டைவிட 0.15 % குறைவு வரப்பெற்றுள்ள திரு. G.முரளி ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.

(ந.க. எண். 0071 /2021/இ1)

023. வந்தவாசி நகராட்சிப்பகுதி வார்டு எண்.1 முதல் 24 வரை உள்ள குடிநீர் பகிர்மான குழாய்கள் மற்றும் பிரதான குழாய்கள், வால்வுகளில் ஏற்படும் பழுதுகளை சரிசெய்ய பராமரிப்பு பணிகள் செய்ய ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் 12.01.2021 தேதியன்று வரப்பெற்ற இரண்டு (2) ஒப்பந்தப்புள்ளிகள்மன்றத்தின் பார்வைக்கும், முடிவுக்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண். | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விவரம் |
|---|---|---|
| 1. | திரு.ஆ.அஜீஸ் | மதிப்பீட்டைவிட 0.10 % குறைவு |
| 2. | திரு.E. மஜீத் | மதிப்பீட்டைவிட 0.20 % அதிகம் |

அலுவலக குறிப்பு—

1. மன்றம் முடிவு செய்யலாம்.
2. வரப்பெற்றுள்ள இரண்டு (2) ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டைவிட 0.10 % குறைவு வரப்பெற்றுள்ள திரு. ஆ.அஜீஸ். ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.

(ந.க. எண். 0071 /2021/இ1)

024. வந்தவாசி நகராட்சிப்பகுதி வார்டு எண்.4ல் பாபாசாகிப்தெரு, குடிநீர் விநியோக பகிர்மான குழாய் அமைக்கும் பணி செய்ய ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் 12.01.2021 தேதியன்று வரப்பெற்ற இரண்டு (2) ஒப்பந்தப்புள்ளிகள்மன்றத்தின் பார்வைக்கும், முடிவுக்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண். | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விவரம் |
|---|---|---|
| 1. | திரு.ஆ.அஜீஸ் | மதிப்பீட்டைவிட 1.95 % அதிகம் |
| 2. | திரு.E. மஜீத் | மதிப்பீட்டைவிட 0.91 % குறைவு |

அலுவலக குறிப்பு—

1. மன்றம் முடிவு செய்யலாம்.
2. வரப்பெற்றுள்ள இரண்டு (2) ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டைவிட 0.91 % குறைவு வரப்பெற்றுள்ள திரு. E. மஜீத் . ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.

(ந.க. எண். 0071 /2021/இ1)

025. வந்தவாசி நகராட்சிப்பகுதி வார்டு எண்.4ல் பாபாசாகிப்தெரு, பகுதியில் சிமெண்ட் சாலை அமைத்தல் பணி செய்ய ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் 12.01.2021 தேதியன்று வரப்பெற்ற இரண்டு (2) ஒப்பந்தப்புள்ளிகள்மன்றத்தின் பார்வைக்கும், முடிவுக்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண். | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விவரம் |
|---|---|---|
| 1. | திரு.ஆ.அஜீஸ் | மதிப்பீட்டைவிட 0.12 % குறைவு |
| 2. | திரு.E. மஜீத் | மதிப்பீட்டைவிட 0.04 % அதிகம் |

அலுவலக குறிப்பு—

1. மன்றம் முடிவு செய்யலாம்.
2. வரப்பெற்றுள்ள இரண்டு (2) ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டைவிட 0.12 % குறைவு வரப்பெற்றுள்ள திரு.. ஆ.அஜீஸ் ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.

(ந.க. எண். 0071 /2021/இ1)

026. வந்தவாசி நகராட்சி பொது சுகாதார பிரிவில் மாவட்ட ஆட்சித்தலைவர் அறிவுரைப்படி ந.க.எண்.9508/2020/பஈ2, நாள்.22.01.2021ன் படி கொரோனா தடுப்பு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளுக்கு பொது சுகாதாரம் மற்றும் குடும்பநலத்துறையிடம் இருந்து பெறப்பட்ட தேவையின் அடிப்படையில் தேவையான டெங்கு மஸ்தூர்களை கூடுதலாக 01.02.2021 முதல் 28.02.2021 வரை 1 மாத காலத்திற்க 1 முதல் 24 வார்டு பகுதிகளுக்கு 40 எண்ணிக்கையில் நிபந்தனைகள் அடிப்படையில் பணியமர்த்த கூறியுள்ளார். ஏற்கனவே நகர மன்ற தீர்மானம் எண்.175, நாள்.29.12.2020ன் படி 35 நபர்களுக்கு அனுமதி பெற்ற நிலையில் தற்பொழுது கூடுதலாக 5 நபர்களை பணியமர்த்தி கொள்ளவும் அதற்கு மேற்படி நகர மன்ற தீர்மானத்தில் மீதம் உள்ள தொகையில் வழங்கிடவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகின்றது.

அலுவலக குறிப்பு—

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க. எண்.1530/2020/எச்1)

ஆணையாளர் மற்றும் தனி அலுவலர்
வந்தவாசி நகராட்சி.